18.12.2018 எஸ் டி சி 154/2018

**குறுக்கு விசாரணை**

நான் பனிரெண்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் பனிரெண்டாம் வகுப்பை எந்த ஆண்டு முடித்தேன் என்றால் ஞாபகமில்லை. நான் போர்வெல் வண்டி வைத்துள்ளேன். நான் என்ன தொழில் செய்கிறேன் என்று புகார் மனுவில் சொல்லவில்லை. 15 வருடங்களாக தொழில் செய்து வருகிறேன். நான் வருமானவரி செலுத்துவதில்லை. நான் சொந்தமாக போர்வெல் வண்டி வைத்து தொழில் செய்து வருவதாக வழக்குக்காக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய வங்கி கணக்கை கடந்த 10 ஆண்டுகளாக வைத்துள்ளேன். என்னுடைய உறவினர் கே.எம்.இளங்கோ என்பவர் மூலமாக எதிரியை எனக்கு பழக்கம். எதிரி கல்லூரி ஆரம்பித்தபொழுது எனக்கு அறிமுகமானார். எந்த வருடம் என்று ஞாபகமில்லை. எதிரி வித்யா மந்திர் இன்ஸ்டியூட் ஆப் டெக்னாலஜி என்கிற பெயரில் கல்லூரி நடத்தி வந்தார். எதிரி கல்லூரி நடத்தி வரவில்லை மூடிவிட்டார் என்ற சங்கதியை 6 மாதத்திற்கு முன்பு தெரிந்து கொண்டேன். கல்லூரி கடந்த 2 வருடங்களாகவே நிதி நெருக்கடி காரணமாக நடக்கவில்லை என்றும், 6 மாதமாக கல்லூரி நடக்கவில்லை என தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய உறவினர் இளங்கோ மேற்சொன்ன கல்லூரியில் டிரஸ்ட் மெம்பர். கடன் கொடுத்ததாக சொல்லும் சமயத்தில் கல்லூரி சம்மந்தமாக இளங்கோவிடம் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. எதிரி அவருடைய சொத்தை கடனுக்காக ஜாமீனுக்காக கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. கடன் கொடுத்ததாக சொல்லும் சமயத்தில் எதிரி நிலை குறித்து நான் விசாரிக்கவில்லை. இளங்கோ சொன்னதால் கடன் கொடுத்தேன். வழக்கில் இளங்கோவை சாட்சியாக விசாரிக்க உள்ளேனா என்றால் தேவைப்பட்டால் விசாரிக்கலாம். என்னுடைய வங்கி கணக்கு எவ்வளவு நிலுவை தொகை உள்ளது என்றால் ரூ.5,000/- இருக்கும். இந்துஸ்தான் பேங்க், திருப்பூர் கிளையில் ரூ.10,00,000/- கடன் வாங்கியுள்ளேன். அந்த கடன் தொகை 2018 ம் ஆண்டு ஜனவரி மாதம் வாங்கினேன். அதற்குரிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும். 2017 ம் ஆண்டின் வங்கி கணக்குப் பட்டியலை வாங்கிக் கொடுக்க முடியும். 2016 ம் ஆண்டு நவம்பர் மாதம் பணம் மதிப்பீடு எடுக்கப்பட்டது. அப்பொழுது என்னுடைய வங்கி கணக்கில் ரூ.40,000/- பணம் இருந்தது. நான் வங்கியில் பெற்ற கடனை முறையாக செலுத்தாததால் வங்கியிலிருந்து எனக்கு அறிவிப்பு வந்துள்ளது என்று சொன்னால் சரியல்ல. பணம்

மதிப்பீட்டு நடவடிக்கைக்கு பிறகு என்னுடைய வங்கி கணக்கு மூலம் வரவு செலவு செய்யவில்லை. நான் எதிரிக்கு 04.10.2017 ம் தேதி ரூ.6,00,000/ கடன் கொடுத்ததாக சொல்லும் சங்கதி தவறானது என்று சொன்னால் சரியல்ல. பொதுவாக கடன் கொடுத்தால் அடமான கடன் ஆவணம் அல்லது கடனுறுதிச் சீட்டு வாங்குவார்கள். 04.10.2017-ம் தேதி கடன் கொடுத்ததற்கு எந்த ஆவணமும் வாங்கவில்லை என்றால் செக் மட்டும்தான். 04.10.017-ம் தேதி கடன் கொடுத்ததற்கு ஆவணம் எதுவும் இல்லை. எதிரி 04.10.2017 ம் தேதிக்கு முன்பு 1 மாதத்திற்கு இளங்கோ மூலமாக கேட்டிருந்தார். மேற்சொன்ன விவரத்தை என்னுடைய புகார் மனுவில் சொல்லவில்லை. ரூ.1 வட்டி பேசப்பட்டது. மாதம் ரூ.6,000/ ஆகும். ரூ.12,000/ அப்பொழுதே கொடுத்துவிட்டார். எதிரி செலுத்துவதாக சொன்ன வட்டி குறித்தும் அட்வான்சாக வட்டி ரூ.12,000/- செலுத்திவிட்டார் என்ற சங்கதியையும் புகார் மனுவில் சொல்லவில்லை. வழக்கில் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்ததற்கான சலானை தாக்கல் செய்யவில்லை. எதிரிக்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லாத காரணத்தினால்தான் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்ததற்கான சலானை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கு எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்று அறிவிப்பு, புகார் மனுவில் சொல்லவில்லை. எதிரிக்கு கடன் கொடுத்தபோது நான், எதிரி, இளங்கோ 3 பேர்தான் இருந்தோம். ரூ.2,000/ நோட்டுக்களாக கொடுத்தேன். எனக்கு தொழில் மூலம் கிடைத்த பணம். எனக்கு தொழில் மூலம் கிடைத்த பணம் என்பதற்கு நான் ஆதாரங்களை தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியாது. 04.10.2017-ம் தேதி ரூ.6,00,000/ இருந்ததாக வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியிடம் நான் வரும்பொழுதே செக்கை கொண்டு வருமாறு சொன்னேன். வழக்கு காசோலை பழமையான காசோலை என தெரிகிறது. காசோலையிலுள்ள கையெழுத்து பச்சை நிறத்தினாலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விவரங்கள் கருப்பு நிறத்தினாலும் உள்ளது. எனக்கு சாந்தகுமார் என்பவரைத் தெரியும். அவருக்கும் எனக்கும் வரவு செலவு இல்லை. சாந்தகுமார் எதிரி மீது வழக்கு போட்டுள்ளார். சாந்தகுமார் மாமனார் எதிரி நடத்தி வந்த கல்லூரியில் ஒரு டிரஸ்டி என்பது தெரியும். எதிரி கல்லூரி ஆரம்பித்த பொழுது எதிரிக்கும் சாந்தகுமாருக்கும் வரவு செலவு இருந்தது என்றும் அப்போது கொடுத்த காசோலையை நான் சாந்தகுமாரின் உறவினர் என்பதால் என் மூலமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. காசோலையிலுள்ள கையெழுத்தும் ஒப்புதல் அட்டையிலுள்ள கையெழுத்தும் ஒன்றல்ல. மேற்சொன்ன சங்கதியை என்னுடைய புகார் மனுவில் தெளிவாக கூறவில்லை என்று

சொன்னால் சரிதான். 20.12.2017 ம் தேதி நல்லாம்பட்டி, பேங்க் ஆப் இந்தியா வங்கி மூலம் போதிய பணமில்லை என்று நான் தாக்கல் செய்த காசோலை திருப்பப்பட்டதாக சொல்லும் சங்கதி தவறானது என்று சொன்னால் சரியல்ல. எதிரியின் சொத்துக்களும் கல்லூரியும் வங்கி மூலம் கடனுக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு எந்த செயல்பாட்டில் இல்லை என்று சொன்னால் தெரியாது. இளங்கோ சொல்லி பணம் கொடுத்ததாக வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சாந்தகுமார் என்னுடைய உறவினர் என்பதால் சாந்தகுமார் என் மூலம் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து/கைரேகை பெறப்பட்டது.

sd/....
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், பெருந்துறை.